கொண்டவர் நம் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்குச் செய்கின்ற தொண்டு தரணிக்கே செய்கின்ற தொண்டு என்று கருதி, தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் கொடுத்ததன்மூலம், தமிழ்த் தாயும் பாராட்டுகின்ற எங்கள் தமிழகத்து தாயாம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, விரைவில் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

262—

பின்னலாடைப் பூங்கா

***6502—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பெண்களுக்கென பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பெண்களுக்கென பின்னலாடை பூங்கா மற்றும் ஆயத்த ஆடை பூங்கா துவங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 18

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம், மிகவும் வறட்சிக்குள்ளான பகுதி. அங்கு வாழும் பெரும்பாலான மக்கள் அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா, பெங்களூரு மற்றும் திருப்பூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று வாழ்க்கையை ஓட்டுகின்ற நிலை இருக்கிறது. குறிப்பாக, பெண்களின் நிலை மிகவும் அவலமான நிலையில் இருக்கிறது. அங்கு, குறைந்தபட்சம் ஓர் ஆயத்த ஆடை, பின்னலாடைத் தொழிலையாவது ஆரம்பித்தால், அப்பெண்களுக்கு வாழ்க்கையை ஏற்படுத்தித் தர ஒரு வாய்ப்பாக அமையும். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தியத் திருநாட்டில் 40 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில், 10 ஜவுளிப் பூங்காக்கள் நம்முடைய தமிழகத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பூங்காக்களில், நூற்பு மற்றும் சாயம் ஏற்றுதல், பதனிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன; ஆட்டோ லூம் எனப்படும் நெசவு மற்றும் பின்னலாடை, ஆயத்த ஆடைகள் விற்பனை செய்யப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நெசவாளர் பெருமக்களின் வேலைவாய்ப்புக்காக இந்தப் பூங்காக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. நெசவாளர்கள் அதிகம் இல்லாத பகுதியாக தருமபுரி மாவட்டம் இருக்கிறது. தொழில்முனைவோர் ஆணா, பெண்ணா என்பது முக்கியம் அல்ல. தொழில் பூங்காவில் வேலைபார்ப்பவர்களில் 3-ல் 2 பகுதி, பெண்கள்தான் உள்ளனர் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். தருமபுரி மாவட்டத்தில் தொழில்முனைவோர் முன்வந்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2013 ஏப்ரல் 18]

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே ஆயத்த ஆடைகள் தயாரிப்பதற்காக ஊராட்சி ஒன்றிய பழைய அலுவலகத்தைத் தந்து, அரசும் 4 ஆண்டுகளுக்கு முன்னால் ஆயத்த ஆடை தயாரிப்புப் பயிற்சி அளிப்பதற்கும், ஆயத்த ஆடை தயார் செய்வதற்குத் திட்டங்களை வகுத்தும் அதற்கான அலுவலகமும் ஒதுக்கித் தரப்பட்டது. அன்று அலுவலகம் திறக்கப்பட்டதாக அறிவித்து, அன்றே மூடுவிழா நடத்தியது; இன்றளவும் அது திறக்கப்படவில்லை. 4 ஆண்டுகளாக மூடி இருக்கிற அந்த ஆயத்த ஆடை தயாரிப்புப் பயிற்சி மையத்தைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி அருகில் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில்தான் பாவலூரில் 25 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, இன்றைய தினம் 26 கோடி ரூபாய் மதிப்பில் அங்கே ஆயத்த ஆடைப் பூங்கா செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி கடந்த கால ஆட்சியில் ஏதாவது அப்படி ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டு அது செயலற்று இருக்குமேயானால், இந்தத் துறை சிறப்பாக ஆய்வு செய்து மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*